# ஆசிரியர் தேர்வு வாரியம்

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் அனைத்து நேரடி நியமன அறிவிக்கை வெளியிட்ட உடன் அதிகபட்ச வயது வரம்பு 57க்குள் உள்ள அனைத்து பணிநாடுநர்களுக்கும் இணையதளத்தில் விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டு விண்ணப்பங்கள் இணையதளம் வாயிலாக பெறப்படுகின்றன.

இவ்வாறு இணையதளம் வாயிலாக பெறப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பதாரரின் பெயர், பிறந்த தேதி மற்றும் பணிநாடுநரின் புகைப்படம் உள்ளிட்ட விவரங்களை விண்ணப்பதாரரால் பதிவேற்றம் செய்யப்பட்ட புகைப்பட அடையாள ஆவணத்தைக் கொண்டு சரிபார்த்து இவற்றுள் ஏதேனும் இரு விவரங்கள் சரியாக இருந்தால் விண்ணப்பதாரருக்கு நுழைவுச் சீட்டு (Hall Ticket) இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது.

இணையதள விண்ணப்பத்தில் (Online Application) விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட பெயர், பிறந்த தேதி, பாலினம், பெற்றோரின் பெயர், மதம், சாதி, கல்வித்தகுதிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைத்து விவரங்களும் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் விண்ணப்பதாரரின் முன்னிலையில் நடைபெறும் சான்றிதழ் சரிபார்ப்பின் போது மட்டுமே (Certificate Verification) சரிபார்க்கப்பட்டு முடிவுகள் வெளியிடப்படும் நடைமுறைகள் இவ்வாரியத்தால் பின்பற்றப்படுகிறது.

இந்நிலையில் சில விண்ணப்பதாரர்களால் அவர்கள் சார்ந்த விவரங்களை கவனக்குறைவுடன் தவறுதலாக இணையதள விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்யும் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இதனைச் சார்ந்த குறிப்புகள் பின்வருமாறு:

I. ஒரு பணிநாடுநரால் இணையதள விண்ணப்பத்தில் பிறந்த தேதியைத் தவறாக குறிப்பிட்டுள்ளது சார்ந்த குறிப்பு:

அரசாணை (நிலை) எண்.231, உயர்க் கல்வித் (F2) துறை, நாள்.06.10.2025ன்படி, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் அரசு கல்வியியல் கல்லூரிகளுக்கு 2708 உதவி பேராசிரியர் பணியிடங்களுக்கு தகுதியான பணிநாடுநர்களை நேரடி நியமனம் செய்ய ஆசிரியர் தேர்வு

வாரியத்தால் அறிவிக்கை எண்.04/2025, நாள்.16.10.2025 அன்று வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 27.12.2025 அன்று நடத்தப்பட்ட எழுத்துத் தேர்வின் 56 பாடங்கள் சார்ந்த மதிப்பெண் பட்டியல் 25.06.2026 அன்று இவ்வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டது.

இப்பட்டியலில் Computer Science / Computer Application என்ற பாடத்தில் இணையதள விண்ணப்ப (Online Application) எண்.24ASC032858 சார்ந்த விண்ணப்பதாரரின் பிறந்த தேதி விண்ணப்பதாரரால் குறிப்பிட்டு பதிவேற்றம் செய்துள்ளார்.அதன்படி மதிப்பெண் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இணையதளத்தில் விண்ணப்பத்தில் (Online Application) விண்ணப்பதாரர் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழில் உள்ளவாறு பிறந்த தேதியை குறிப்பிட வேண்டிய கலத்தில் விண்ணப்பதாரர் தனது பிறந்த தேதி 27.09.1991 என குறிப்பிடுவதற்கு பதிலாக அன்னாரின் பத்தாம் வகுப்பு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள TMR CODE NO. & DATE பகுதியில் உள்ள தேதியை 05.06.2006 எனக் குறிப்பிட்டு தவறாக பதிவேற்றம் செய்துள்ளார்.

இணைப்பு:

1. சார்ந்த விண்ணப்பதாரரின் இணையதள விண்ணப்ப நகல்
2. விண்ணப்பதாரரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் நகல்

II. ஒரு பணிநாடுநரின் பெயருக்கு பதில் எண்கள் குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பான விவரம்:

25ASC041667 என்கிற விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் பெயருக்குப் பதிலாக அன்னாருடைய பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் எண்ணை AA 2772011 என்பதைக் குறிப்பிட்டு விண்ணப்பதாரரால் இணையதள விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர், 22.12.2025 அன்று தனது பெயரில் திருத்தம் செய்ய கோரி இணையதள விண்ணப்ப நகலுடன் இணைக்கப்பட்ட அடையாள ஆதாரத்துடன் விண்ணத்தாரரிடமிருந்து மனு பெறப்பட்டது.

இவ்விவரங்கள் சரியென உறுதி செய்யப்பட்டதன் அடிப்படையில், விண்ணப்பத்தாரரை 27.12.2025 அன்று நடைபெற்ற எழுத்துத் தேர்வில் அனுமதிக்க முதன்மைக் கல்வி அலுவலரின் வாயிலாக விண்ணப்பதாரர் சார்ந்த

தேர்வு மையத்திற்கு அறிவுறுத்தப்பட்டது. விண்ணப்பத்தாரர்கள் இணைய வழி விண்ணப்பத்தில் பதிவேற்றம் செய்து சமர்ப்பித்த பெயர் மற்றும் தரவுகளின் அடிப்படையில் மட்டுமே தேர்வறை அனுமதிச் சீட்டு (Hall Ticket) வழங்குதல் மற்றும் தேர்வு மதிப்பெண் வெளியீடு ஆகிய செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இணைப்பு:

1. சார்ந்த விண்ணப்பதாரரின் இணையதள விண்ணப்ப நகல்
2. விண்ணப்பதாரர் பெயர் திருத்தம் கோரிய மனுவின் நகல்

தலைவர்